மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற ஆண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தேன். அதேபோல சப்சென்டர்களைப் பொறுத்தவரையில் மருத்துவர்கள் ஒரு குறிப்பிட்ட நாளில் விசிட் போக வேண்டும் என்று இருக்கிறது. எனவே, அங்கேயும் நடத்தி வருகிறார்கள். இதிலே ஏதாவது குறிப்பிட்ட நாளில் அவர் சரியாக வராமல் இருந்தால் அவர்மேல் நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே தனியாக விளம்பரத்தை ஏற்படுத்த முடியாது. குறிப்பிட்ட நாளில் அங்கே மருத்துவர் வருவதை அந்தப் பகுதி மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்பதற்காக அது குறிப்பிடப்படுகிறது. இது தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் *423*, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

423—

செங்கம் அரசு மருத்துவமனையில் இணைப்புப் பாதை அமைத்தல்

*** 39264—*டாக்டர் பெ. வீரபாண்டியன் :***

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, செங்கம் அரசு மருத்துவமனையில் புதிதாக துவங்கப்பட்டுள்ள இருபது படுக்கைகள் கொண்ட கட்டிடத்திற்கும், மருத்துவமனைக்கும் இணைப்புப் பாதை இல்லாதிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இப்பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) ஆம்.

(ஆ) சிறிய கட்டுமானப்பணியின் கீழ் இப்பாதையை அமைக்க பொதுப்பணித்துறையில் இப்பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

முற்பகல் 10.10

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய

1995 ஏப்ரல் 25]

நல்லாட்சியில் மருத்துவத் துறையில் அன்புள்ளம் கொண்ட மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். 20 படுக்கைகள் கொண்ட ஒரு சிறிய மருத்துவமனை பழைய கட்டிடத்திற்கு பக்கத்திலே கட்டப்பட்டு அதைப் பயன்படுத்தி வருகிறார்கள். ஓ.பி.யும், ஆபரேஷன் தியேட்டரும் பழைய கட்டிடத்திலே இருக்கின்றன. உள் நோயாளிகளை அனுமதிக்க வேண்டும் என்றாலும் அல்லது ஆபரேஷன் செய்துவிட்ட பிறகு புதிய கட்டிடத்திற்கு மாற்றுவதாக இருந்தாலும் வராண்டா வழியாக ஓ.பி. மற்றும் வெளியில் வந்துவிட்ட பிறகு புதிய மருத்துவமனை கட்டிடத்திற்குச் செல்ல வேண்டும். எனவே, அங்கு இணைப்புப் பாதை வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மழைக்காலங்களிலும் நடக்க முடியாத நோயாளிகளை ஸ்டெப்ஸில் தூக்கிக் கொண்டு போக வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. இணைப்புப் பாதை அமைக்க வேண்டிய தூரம் 50 அடிதான் இருக்கிறது. எனவே, அதைக் கட்டிக்கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதி ஆண்டிலேயே ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக நிதி தனியாக ஒதுக்கப்படவில்லை என்றாலும், 'மெயின்டனன்ஸ் பண்டு' மூலமாக அதைச் செய்வதற்கு சாத்தியம் இருக்கிறதா என்று நான் அதிகாரிகளிடத்தில் விசாரிக்கிறேன். அப்படி சாத்தியக்கூறுகள் இருந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மருத்துவமனை பாதுகாப்பாக இருப்பதற்கு சுற்றுச்சுவர் அவசியமாகத் தேவைப்படுகிறது. நடப்பு ஆண்டில் 3/4 பங்கு சுற்றுச்சுவர் கட்டி முடித்தாகி விட்டது. இன்னும் 1/4 பங்கு கட்ட வேண்டியிருக்கிறது. எனவே, அதையும் இந்த நிதி ஆண்டிலேயே முடித்துக்கொடுக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சொல்லலாம். 3/4 பங்கு கட்டிய அரசு 1/4 பங்கை கட்ட முடியவில்லையென்றால் நிதி நிலைமை எப்படி இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். அந்த 1/4 பங்கு காம்பவுண்ட் சுவரையும் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு தெரிவித்து ஆவன செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 424, திரு. டி. வேலையா, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.